# அமைச்சுக்களில் அரசகரும மொழிக் கொள்கை அமுலாக்கம் தொடர்பான ஆய்வு

## தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகருமமொழிகள் அமைச்சு மற்றும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் என்பவற்றுக்கிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை


தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு

40, புத்கமுவ வீதி, ராஜகிரிய.

CPA

Centre for Policy Alternatives

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

6/5, லெயார்ட்ஸ் வீதி, கொழும்பு – 05.

தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு (Ministry of National Coexistence, Dialogue and Official Languages (MNCD&OL) மற்றும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (Center for Policy Alternatives (CPA)) என்பன ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கு விருப்பத்தை தெரிவிப்பதுடன் அமைச்சுக்களில் அரசகரும மொழிக் கொள்கை அமுலாக்கம் தொடர்பான ஆய்வை மேற்கொள்வதற்கு கீழ்க்காணும் புரிந்துணர்வுகளை ஏற்படுத்திக்கொள்கின்றன.

## பந்தி I
## முகவாசகம்

1. அரசகருமமொழிக் கொள்கையை பயனுள்ள வகையிலும் வினைத்திறனுடனும் அமுல்படுத்துவதற்கு அனைத்து அரச நிறுவனங்களினதும் பூரண ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளுதல் கட்டாயமானதாகும். அரசகரும மொழிக்கொள்கையை அமுல்படுத்தும் பொறுப்பு ஒப்படைப்பானது 2009-09-25 ஆம் திகதி வெளியிடப்பட்ட 1620/27 இலக்கத்தைக் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2009-11-25ஆம் திகதி வெளியிடப்பட்ட 18/2009ஆம் இலக்கத்தைக் கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கை மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் மூலம் அரச நிறுவனங்களினால் மொழித் திட்டத்தை தயாரிப்பதற்கான வழிகாட்டல் கைநூல் தயாரிக்கப்பட்டதுடன், அதன் மூலம் அரச நிறுவனங்களில் மொழித் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் வழிகாட்டுதல் என்பன மொழித்திட்ட வசதிப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக இடம்பெற்றன. குறித்த வழிகாட்டல்களை அடிப்படையாகக் கொண்டு அரசகரும மொழிக்கொள்கையை அமுலாக்குவதற்கான நான்கு பிரதான துறைகள் தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளன. அதாவது, அரசகரும மொழிக் கொள்கை அமுலாக்கத்தை வெளிப்படுத்துதல், அரசகரும மொழிக் கொள்கை அமுலாக்கத்திற்கு அமைவாக நிருவாகம் மற்றும் ஆவணப்படுத்தும் செயற்பாடுகள், அரசகரும மொழிக்கொள்கை அமுலாக்கத்திற்கு அமைவாக சேவை வழங்குதல், அத்துடன் அரசகரும மொழிக் கொள்கைக்கு அமைவாக நிறுவன அர்ப்பணிப்பு மற்றும் பொறிமுறைகள் என்பன தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது. அமைச்சுக்கள் மட்டத்தில் அரசகரும மொழிக் கொள்கையை அமுலாக்கும் செயற்பாடுகளை மேலும் துரிதப்படுத்தும் நோக்கில் அதன் வினைத்திறன் தொடர்பாக ஆய்வொன்றை நடத்துவதன் மூலம் குறிப்பிட்ட நிறுவனத்தின் தற்போதைய செயற்பாட்டு நிலை பற்றிய விளக்கத்தைப் பெறுதல் காலத்தின் தேவையாக உள்ளது. அதற்கு அமைவாக அமைச்சுக்களில் அரசகரும மொழிக்கொள்கை அமுலாக்கம் தொடர்பான ஆய்வினை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின.

## பந்தி II

## பெயர் குறித்து அதிகாரமளிக்கப்பட்டோர்

2.1 இப்புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைவாக தனது கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு (MNCD&OL) பெயரிடப்படுகிறது.

2.2 இப்புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைவாக தனது கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் (CPA) பெயரிடப்படுகிறது.

## பந்தி III

## அமைச்சுக்களில் அரசகரும மொழிக்கொள்கை அமுலாக்கம் தொடர்பான ஆய்வு

3. இவ் ஆய்வின் மூலம் சில முக்கிய நோக்கங்களை அடைவதற்கு எதிர்பார்க்கின்றது. அவையாவன:

3.1 அமைச்சு மட்டத்தில் அரசகரும மொழிக் கொள்கை அமுலாக்கத்தின் நிலை பற்றிய தகவல்களை பெற்றுக்கொள்ளல்.

3.2 அரசகரும மொழிக் கொள்கை அமுலாக்கத்தின் போது அமைச்சு மட்டத்தில் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்.

3.3 தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் முழுமையான தொழிநுட்ப வழிகாட்டலின் கீழ் அமைச்சுக்களில் மொழித் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்குத் தேவையான பின்னணியை உருவாக்குதல்.

3.4 அரச நிறுவனங்களில் அரசகரும மொழிக் கொள்கை அமுலாக்கம் தொடர்பான ஆய்வின் மூலம் கிடைக்கப்பெறும் தகவல்களை அரச மட்டத்தில் கொள்கை வகுத்தல் மற்றும் நிதித் தேவைகளைத் தீர்மானிக்கும் போது முன்னுரிமை வழங்குவதற்காகப் பயன்படுத்துதல்.

3.5 அமைச்சுக்களின் மட்டத்தில் அரசகரும மொழிக் கொள்கையை பயனுள்ள வகையிலும் வினைத்திறனுடனும் அமுலாக்குவதன் மூலம் பொதுமக்களின் சேவைகளை சமமாக அணுகுவதற்கான சந்தர்ப்பங்களை மேம்படுத்துதல்.

## பந்தி IV

## ஆய்வை அமுல்படுத்துவதற்கான திட்டம்

4.1 ஆய்வை அமுல்படுத்துவதற்கு தேவையான செயற்பாட்டு ரீதியான பங்களிப்பையும் தொழிநுட்ப ஒத்துழைப்பையும் தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு, அரசகரும மொழிகள் ஆணைக்குழு என்பவற்றினால் வழங்கப்படுவதுடன் நிதிப் பங்களிப்பை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வழங்கும்.

4.2 இவ் ஆய்வு 2017 மார்ச் தொடக்கம் 2017 ஜூலை மாதம் வரை இடம்பெறவுள்ளது.

4.3 இவ் ஆய்வை அமுல்படுத்துவது தொடர்பாக குறிப்பிட்ட இரு பிரிவினரதும் கடப்பாடுகள் பற்றிய தகவல்கள் V மற்றும் VI அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பந்தி V

## தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் பங்களிப்பு

5.1 வினாக்கொத்தை தயாரிப்பதற்குத் தேவையான தொழிநுட்ப ஆலோசனைகளை அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் ஒத்துழைப்புடன் வழங்குதல்.

5.2 களச் செயற்பாடுகள் மற்றும் கள ஆய்வு உத்தியோகத்ததர்களைப் பயிற்றுவித்தல் மற்றும் களச் செயற்பாடுகளை கண்காணித்தல்.

5.3 இவ் ஆய்வு தொடர்பாக அமைச்சுக்களின் பிரதம அரசகரும மொழிக் கொள்கை அமுலாக்கும் உத்தியோகத்தர்களுக்கும், அரசகருமமொழிக் கொள்கை அமுலாக்கும் உத்தியோகத்தர்களுக்கும் அறிவூட்டுதல் மற்றும் குறித்த செயற்பாடுகளை வசதிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

5.4 இவ் ஆய்விற்கு சமாந்திரமாக குறிப்பிட்ட அமைச்சுக்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மொழிக் குழுவின் மூலம் அரசகரும மொழிக் கொள்கை அமுலாக்கலின் தற்போதைய நிலையை சரிபார்த்தல் நிரலைப் பயன்படுத்தி மதிப்பிடுதல்.

5.5 ஆய்விற்கு அமைவாக அமைச்சுக்களின் அடிப்படை அறிக்கை மற்றும் இறுதி அறிக்கையைத் தயாரிப்பதற்கு ஆலோசனை வழங்குதல்.

5.6 அமைச்சுக்களுக்கு அமைவான இறுதி அறிக்கையைத் குறிப்பிட்ட அமைச்சுக்களுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

5.7 ஆய்வின் இறுதி அறிக்கையின், பரிந்துரைகளை எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தும் முகமாக மொழித்திட்டத்தை அமைச்சு மட்டத்தில் தயாரிப்பதற்கு தேவையான தொழில்நுட்ப ஆலோசனை வழங்குதல்.

## பந்தி VI

## மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் பங்களிப்பு

6.1 ஆய்விற்கு ஏற்புடைய வினாக்கொத்தைத் தயாரித்தல், மொழி பெயர்த்தல், மற்றும் அமைச்சின் அங்கீகாரத்திற்கு உட்படுத்தப்பட்டு அதனை இறுதிநிலைப்படுத்தல்.

6.2 ஆய்வினை மேற்கொள்வதற்காக பல்கலைக்கழக மாணவர்களிடத்தில் இருந்து ஆய்வு உத்தியோகத்தர்களை தெரிவு செய்தல், இணைத்துக்கொள்ளுதல், பயிற்றுவித்தல், களச் செயற்பாடுகளுடன் இணைத்தல் அவர்களது கொடுப்பனவு மற்றும் ஏனைய செயற்பாடுகளை முகாமைத்துவம் செய்தல்.

6.3 அந்தந்த அமைச்சுக்களில் பெயரிடப்படும் மைய உத்தியோகத்தர் மற்றும் பிரதம அரசகரும மொழிகள் அமுலாக்கும் உத்தியோகத்தர் ஆகியோரினால் பெயரிடப்படும் வேறு உத்தியோகத்தரொருவரை பயிற்றுவித்தல்.

6.4 ஆய்வின் பிரதான அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் மொழிபெயர்த்தல்.

6.5 ஆய்வின் பரிந்துரைகள் உள்ளடக்கிய இறுதி அறிக்கையைத் தயாரித்தல்.

6.6 **நிதிப் பங்களிப்பு**

குறித்த மதிப்பீட்டு ஆய்வுக்கு முதல் கட்டம் முதல் இறுதிக்கட்டம் வரை தேவையான செயற்பாடுகளுக்காக மொத்தமாக ரூபா. இருபத்து மூன்று இலட்சத்து அறுபத்தோராயிரம் (2,361,000/-) நிதி பங்களிப்பாக வழங்குதல்.

## பந்தி VII
## கால அட்டவணை

7. இக் கருத்திட்டம் 2017 மார்ச் தொடக்கம் 2017 ஜூலை மாதம் வரை இடம்பெறவுள்ளது.

## பந்தி VIII
## எதிர்பார்க்கப்படும் வெளியீடு

8.1 அமைச்சுக்களில் அரசகருமமொழிக் கொள்கை அமுலாக்கம் தொடர்பான ஆய்வின் வினாக்கொத்து (மொழிபெயர்ப்புடன்).

8.2 ஆய்வை அமுல்படுத்துவதற்கு தொடர்பான ஆய்வு உத்தியோகத்தர்களை பயிற்றுவிக்கும் செயலமர்வு.

8.3 ஆய்வினை மேற்கொள்வதற்காக குறிப்பிட்ட ஒவ்வொரு அமைச்சுக்களினதும் அடிப்படை அறிக்கை

8.4 ஆய்விற்கமைவாக இறுதி அறிக்கை

## பந்தி IX
## மதிப்பீடு மற்றும் கண்காணிப்பு

9. தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு மற்றும் அரசகரும மொழிகள் ஆணைக்குழு என்பனவற்றினால் மதிப்பீடு மற்றும் கண்காணிப்பு மேற்கொள்ளப்படும்.

## பந்தி X

## பொது ஒழுங்கு விதிமுறைகள்

10.1 இப் புரிந்துணர்வு உடன்படிக்கை தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு மற்றும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பூரண புரிந்துணர்வுடன் இடம்பெறுகின்றது.

10.2 இப் புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் நடைமுறைப் பயன்பாட்டின் போது ஏற்படக்கூடிய கருத்து வேறுபாடுகளின் போது இரு பிரிவினரும் கலந்துரையாடல் மூலம் குறித்த நிலையை தீர்த்தல் வேண்டும்.

10.3 தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு மற்றும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தேவையென கருதப்படுமாயின் எழுத்து மூலமான அறிவிப்பின் மூலமாக இவ் புரிந்துணர்வு உடன்படிக்கையை திருத்துவதற்கு மற்றும் முடிவுறுத்துவதற்கு முடியும்.

**கலாநிதி. பாக்கியசோதி சரவணமுத்து**
நிறைவேற்றுப் பணிப்பாளர்
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

**ரஞ்சித் உயங்கொட**
செயலாளர்
தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும்
அரசகருமமொழிகள் அமைச்சு

2017 மார்ச் 09 ஆம் திகதி கொழும்பில்

**சாட்சியாளர்கள்**

1.

2.